Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 170/2022 PW-7**

Name : பிருந்தா
Father / Husband name : ரகுபதி
Village : விழுப்புரம்
Age : 51
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 12.06.2026

Accused present. Defence counsel present. Witness identified by Roshanai PS HC 2735 Tr.Palanivel.

**முதல் விசாரணை**

நான் தற்போது விழுப்புரம் டிசிஆர்பியில் ஆய்வாளர் பணி செய்கிறேன். கடந்த 30.09.2021 அன்று நான் ரோசணை காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது உதவி ஆய்வாளர் வினோத்ராஜ் பதிவு செய்த நிலைய குற்ற எண் 481/2021, U/s. 294(b),353,384,387 IPC ன் படி வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினம் மதியம் 1 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் இளையச்சந்திரன் மற்றும் கலைவாணன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **அவைகள் முறையே அ.சா.ஆ 5 மற்றும் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் கோபண்ணா, ஆனந்தன், அய்யனார் ஆகியோர்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றையதினம் 16.00 மணிக்கு எதிரி மணிமாறன் (எ) ராஜ்குமார் என்பவரை ரோசணை ஏரிக்கரை அருகே காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்புக்காவலுக்கு அனுப்பிவைத்தேன். வழக்கின் புலன் விசாரணை முடித்து 04.10.2021 அன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தாக சொல்லும் பகுதி மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். இந்த சாட்சிகள் அனைவரும் டாஸ்மாக் கடையில் வேலை

செய்பவர்கள் என்றால் சரிதான். தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, யாரும் முன்வரவில்லை. அன்றையதினம் டாஸ்மாக்கடையில் மதுபானம் எடுத்துச்சென்றதாக தான் புகார் என்றால் சரிதான். அன்றையதினம் டாஸ்மாக்கடையின் இருப்பு விவரம் குறித்து ஆவணம் பார்வையிட்டேனா என்றால் இல்லை, ஒரு பாட்டில் தான் எதிரி எடுத்துச்சென்றார். என்ன பெயர்வகை மதுபானம் என்று புகார் மற்றும் சாட்சி விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான், குவாட்டர் பாட்டில் என சொல்லியுள்ளார். எதிரியின் வழக்கு பதிவு செய்யவேண்டும் என்பதற்காக அடையாளம் தெரியாத நபர் மீது கொடுத்த புகாரில் வழக்கு பதிவு செய்துள்ளேன், சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் மீது பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகள் சேர்க்கவில்லை என்றால் சரிதான், எதிரியின் மீது பல வழக்குகள் உள்ளதால் யாரும் வரவில்லை. யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை என்று தனி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.